


முள்ளிவாய்க்காலில் இறுதி வரை நின்று போராடிய போராளியின் அனுபவப் பதிவு இது. பாதுகாப்பான தளம் ஒன்றை இவர் சென்றடையும் வரை இவரது விபரங்களை தவிர்த்துக்கொள்கின்றோம்.

# பாலமோட்டையில் நடந்த கடும் சமர், இறுதிவரை விட்டுக்கொடுக்காத போராளிகள்

மன்னார் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர்தான் மக்களின் இடம்பெயர்வும் அதிகரிக்கத் தொடங்கியிருந்தது. சாதாரணமாக ஒரு குடும்பம் பல தடவைகள் குறிப்பிட்ட காலத்திற்குள் இடம்பெயர்கிறார்கள். இடம்பெயர்ந்து, இடம்பெயர்ந்தே இவர்களின் நகைகள் சொத்துக்கள் எல்லாம் அழிந்துபோனது. சிறீலங்கா அரசின் பொருளாதார தடையினால் எரிபொருள் தட்டுப்பாடு. இதனால், உழவு இயந்திரத்தையோ, லாண்ட் மாஸ்ரரையோ வாடகைக்கு பிடிப்பது என்றால் குறைந்த பட்சம் 5000 ரூபா என்றாலும் வேண்டும். 20 கிலோ மீற்றர் செல்வதற்குள் வைத்திருந்த நகைகள் எல்லாம் வித்து சாப்பாட்டிற்கும் இடம்மாறுவதற்குமே பலர் செலவளித்துவிட்டார்கள். கையில் பணம் இல்லாதவர்களின் நிலை கஞ்சிதான்.

இதேவேளை, படையினரின் தொடர்ச்சியான இடைவிடாத தாக்குதல்களினால் விடுதலைப் புலிகள் மெல்ல மெல்ல நிலங்களை இழக்க வேண்டிய சூழ்நிலை வந்துகொண்டிருந்தது. படையினருக்கு கணிசமான இழப்புக்கள் ஏற்பட்டபோதும், இழப்புக்களைப் பொருட்படுத்தாமல் உடனடியாக களமுனைக்கு அடுத்த அணியைக் கொண்டுவந்து இறக்கி தாக்குதலை தொடர்வதற்கு வசதிகள் இருந்தன. ஆனால், விடுதலைப் புலிகள் பக்கத்தில் இது பெரும் நெருக்கடியாக இருந்தது. படையினரின் எறிகணை வீச்சில் அகப்பட்டு சாவதற்கு தயாராக இருந்தவர்கள் கூட, களமுனையில் போராடிச் சாவதற்கு தயாராக இருக்கவில்லை என்பதுதான் வேதனை. தமிழ் மக்களின் நிலத்தை ஆக்கிரமிக்க எதிரி தனது இனத்தின் உயிரையும் கோடிக்கணக்கான ரூபாக்களையும் இழப்பதற்கு தயாராக நின்றபோது, தங்கள் சொந்த நிலத்தைக் காப்பதற்கு மறுத்து, தமிழ் மக்கள் சிலர் ஓடி ஒளிந்துகொள்ள முனைந்ததுதான் கவலைக்குரியதாக மாறியிருந்தது.

ஓயாத அலைகள் நடவடிக்கையில் ஆனையிறவை மீட்டெடுத்து, பயந்து ஓடிக்கொண்டிருந்த சிங்களப் படையினரை விரட்டிச் செல்வதற்கு வாய்ப்புக்கள் இருந்தும், அது முடியாமல் போனதற்கு காரணம் போராளிகளின் பற்றாக்குறை. அவ்வாறு இருந்திருந்தால் யாழ்குடாவையும் மீட்டிருப்பேன் என்று ஒரு முறை பிரிகேடியர் பால்ராஜ் அவர்கள் உறுதியோடும் மிகவும் ஏக்கத்தோடும் குறிப்பிட்டிருந்தார். மன்னாரில் எதிரி முன்னேறுவதற்கும் இந்தப் பற்றாக்குறையே காரணமாகியது.

ஆனாலும் இருக்கும் வசதிகளைக்கொண்டு எதிரியின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தும் நடவடிக்கையில் போராளிகள் இறங்கினார்கள். இதனையடுத்துதான் குறைந்த போராளிகளுடன் இராணுவத்தினரின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தும் வகையிலான மண் அரணின் உருவாக்கம் அமைகின்றது. இந்த மண் அரண்கள்தான் எதிரிக்கு பலத்தை இழப்புக்களை ஏற்படுத்தி, அவனது முன்னேற்றத்தை பெருமளவில் தடுத்து நிறுத்தியது.

இதேவேளை, விடுதலைப் புலிகள் அமைத்த இந்த மண் அரண்கள் மக்கள் மத்தியிலும் ஒரு அச்சத்தை உருவாக்கியது. சண்டை மிகக்கடுமையாகத் தொடரப்போகின்றன என்பதை இந்த மண் அரண்களே மக்களுக்கு உணர்த்தி நின்றன.

இந்நிலையில், பெரியமடு ஊடாக வந்த சிறீலங்கா படையினர் மல்லாவி மற்றும் துணுக்காய் பகுதிகளுக்கு அண்மைப் (10 கிலோ மீற்றர் உள்ளன) பிரதேசங்கள் எதிரியின் மோட்டார் எறிகணைக்கு எட்டக்கூடிய இலக்கிற்குள் வந்துவிட்டது. மறுபக்கமாக ஏ-9 வீதி ஊடறுக்கும் நோக்கில் வவுனியா பாலமோட்டை களமுனையூடாக சிறீலங்கா படையினர் பூநகரி நோக்கிய படை நகர்வினை மேற்கொள்கின்றார்கள். இதேவேளை, பாலமோட்டை, குஞ்சுக்குளம், நவ்வி போன்ற பகுதிகள் ஊடாக இந்த நகர்வு மேற்கொள்ளப்பட்டது. விடுதலைப் புலிகள் எதிர் தாக்குதலை முறியடித்து நடத்தி புதூர் கோவிலுக்கு அண்மைய பகுதி வரை வந்துவிட்டார்கள். அதாவது ஏ-9 வீதிக்கு மேற்காக 5 - 8 கிலோ மீற்றர் வரையான தூரத்தில் படையினர் வந்துவிட்டார்கள்.

இதில் வவுனியாவின் பாலமோட்டை களமுனை பற்றி இங்கு எடுத்துரைக்க வேண்டிய தேவை உள்ளது. ஏற்கனவே இக்களமுனை பற்றிப் பார்த்திருக்கின்றோம். எதிரிக்கு சிம்மசொப்பனமாக விளங்கிய இடங்களில் பாலமோட்டை மிக முக்கியமான களங்களில் ஒன்று. இந்தக் களமுனை வவுனியா கட்டளை தளபதியின் கீழ் பொறுப்பானவர்களினால் கட்டளை இடப்பட்டு தாக்குதல் நடத்தப்பட்ட இடம். பாலமோட்டை வவுனியா, மன்னார், முல்லைதீவு மாவட்டங்கள் என மூன்று மாவட்டங்களின் ஓர் எல்லை கிராமமாக இருக்கின்றது.

**எதிரிக்கு சிம்மசொப்பனமாக விளங்கிய இடங்களில் பாலமோட்டை மிக முக்கியமான களங்களில் ஒன்று. காட்டுக்குள் 10 மீற்றர் தூரத்தில் ஒருவர் நின்றால்கூட தெரியாத அளவிற்கு சிறுகாடும் பெருங்காடும் ஒன்று சேர்ந்த இடம். வவுனியா மாவட்ட கட்டளை தளபதியாக இருந்து தற்போது எதிரியின் கையில் உள்ள தளபதி லோறன்ஸ் தலைமையின் கீழ்தான் வவுனியா மாவட்டம் அன்றைய காலப்பகுதியில் காணப்பட்டது. இதில் பாலமோட்டை களமுனை தற்போது எதிரியின் கையில் உள்ள பாப்பா எனப்படும் பொறுப்பாளரின் வசம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.**



இங்கு பற்றைக் காடுகள், அடர்ந்த காடுகள், ஆறுகள், வயல்வெளிகள் என செழிப்பு நிறைந்த ஒரு வனப் பகுதியாகும். காட்டுக்குள் 10 மீற்றர் தூரத்தில் ஒருவர் நின்றால்கூட தெரியாத அளவிற்கு சிறுகாடும் பெருங்காடும் ஒன்று சேர்ந்த இடம்.

வவுனியா மாவட்ட கட்டளை தளபதியாக இருந்து தற்போது எதிரியின் கையில் உள்ள தளபதி லோறன்ஸ் தலைமையின் கீழ்தான் வவுனியா மாவட்டம் அன்றைய காலபகுதியில் காணப்பட்டது. இதில் பாலமோட்டை களமுனை, தற்போது எதிரியின் கையில் உள்ள பாப்பா எனப்படும் பொறுப்பாளரின் வசம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

பாலமோட்டை களமுனையில் எத்தனையோ நூற்றுக்கணக்கான சிறீலங்கா படையினரை கொன்ற பெருமையும் அதேவேளை, எத்தனையோ மாவீரர்களின் வரலாற்று தடங்களை கொண்ட இடமாக மாறியிருக்கின்றது.

இந்த பாலமோட்டை களமுனையில்தான் ஒரு பாடலாசிரியராக, சிறந்த பொறுப்பாளராக, சிறந்த போராளியாக மக்கள் மனங்களில் இடம்பிடித்திருந்த லெப்.கேணல் ராணிமைந்தன் நின்று களமாடி வீர்சாவை தழுவிக்கொண்டவர். இப்படி எத்தனையோ சிறந்த போராளிகள் இந்தக் களமுனையைத் தக்கவைப்பதற்காக தங்களையே அர்ப்பணித்திருந்தார்கள். எத்தனையோ சிறந்த போர் வீரர்களான மாவீரர்களின் தடம் பதித்த மண் பாலமோட்டை. பாலமோட்டையில் எதிரி ஒரு அடிகூட முன்வைக்க விடமாட்டோம் என்று உறுதியோடு நின்று போராளிகள் போராடினார்கள். எத்தனையோ களமுனைகள் எதிரியிடம் விழுந்தபோதும் இந்தக் களமுனை மட்டும் எதிரியின் கைகளுக்குள் இலகுவில் விழுந்துவிடவில்லை.

எதிரியின் நகர்வுகளை உடனுக்குடன் முறியடித்து, தங்கள் காவலரண்களை விட்டுக் கொடுக்காத களமுனையாக போராளிகள் இங்கு நின்று போராடியிருந்தார்கள். இவ்வாறான கால பகுதியில்தான் அங்கு அசம்பாவிதமான நிகழ்வு ஒன்று நடந்தேறுகின்றது. பாலமோட்டை பகுதி கட்டளைக்கு பொறுப்பாக இருந்த பாப்பா தனது துப்பாக்கி (கோல் கொமாண்டோ) தவறுதலாக வெடித்ததில் தனது காலில் படுகாயமடைந்து களமுனையில் இருந்து பின் நகர்த்தபடுகின்றார். இதுவொரு திட்டமிட்ட செயலாகவே கருதப்பட்டது. இந்தச் சம்பவம் பாப்பாவை பொறுத்தமட்டில் சாதகமாக அமைகின்றது. காயம் மாறுவதற்கு ஆறுமாத காலம் எடுக்கும். இதனால் தற்போதைக்கு களமுனைக்கு செல்ல வேண்டிய அவசியம் அவருக்கு எழவில்லை. இறுதிவரை அந்த வாய்ப்பு அவருக்கு எழவேயில்லை என்பதுதான் உண்மை.

இதேவேளை, பாலமோட்டையை எதிரியால் இறுதிவரை கைப்பற்றமுடியவில்லை. எனினும், ஏனைய பிரதேசங்கள் படையினர் வசம் விழுந்த நிலையில், பாலமோட்டை நிலைகளை புதூர் வரை போராளிகள் பின்னகர்த்தினார்கள். இதன் பின்னரே பாலமோட்டைக்குள் படையினரால் உள்நுழைய முடிந்தது.

தொடரும் .....